செய்தி வெளியீடு எண்:359 நாள்: 08.06.2017

## செய்தி வெளியீடு

மத்திய அரசின் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் ஏற்கனவே உள்ள விமான ஓடுதளங்கள் மற்றும் விமான நிலையங்களை மேம்படுத்தவும், நாட்டில் பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைவான பயன்பாட்டில் உள்ள விமான நிலையங்கள் இடையே மீண்டும் விமான போக்குவரத்து சேவையினை ஏற்படுத்தும் பொருட்டும், தேசிய சிவில் விமான போக்குவரத்து கொள்கையினை 21.10.2016–ல் வெளியிட்டது.

மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தினை (Regional Connectivity Scheme - UDAN) தமிழகத்தில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் முன்னிலையில் இன்று (8.6.2017) தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்தை எளிமையாக்கி, குறைவான கட்டணத்தில் சாதாரண மக்களும் விமான பயணம் மேற்கொள்ள ஏதுவாக விமான சேவை வழங்குவது ஆகும்.

தமிழகத்தில் முதற்கட்டமாக ஒசூர், சேலம் மற்றும் நெய்வேலி ஆகிய இடங்களில் இத்திட்டத்தின் கீழ் விமானச் சேவைகள் தொடங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் சிறிய நகரங்களில் விமானச் சேவைகள் தொடங்கப்பட்டு, அந்நகரங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் வளர்ச்சி அடைந்து, தொழில் மற்றும் வர்த்தகம் பெருகி, வேலைவாய்ப்பு அதிகரிக்க வழிவகை ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் திரு. ஆர்.என். சௌபே, இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பி.டபுள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., நில நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மோகன் பியாரெ, இ.ஆ.ப., திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் தலைவர் திரு. குருபிரசாத் மொகபாத்ரா, இ.ஆ.ப., மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திருமதி. உஷா பாதே, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 8.6.2017